உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில்
பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

தமிழாய்! தமிழனாய்!! தமிழ்மொழிக்காய்!!!

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil

♦ பதிப்பு : நாகர்கோவில் ♦ 16.10.2026 ♦ மலர் 04 ♦இதழ்: 290 ♦ வெள்ளி

♦Edition : Nagercoil ♦16.10.2026 ♦ Vol : 04 ♦Issue : 290 ♦Page : 4 ♦Rs. 5/-

இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தில் கருத்து வேறுபாடுகள் களையப்பட்டன!

புதுடெல்லி: இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான கருத்து வேறுபாடுகள் களையப்பட்டு இறுதிக் கட்டத்தில் உள்ளது என மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகள் சற்று தேக்க நிலையை எட்டியுள்ளதாக மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறி ஒரு வாரத்துக்கும் மேலான நிலையில், ஜெய்சங்கரின் இந்த நேர்மறையான கருத்து வெளியாகியுள்ளது கவனிக்கத்தக்கது. இதுகுறித்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் மேலும் கூறியதாவது: நாங்கள் சில முடிவுகளுக்காகக் காத்திருக்கிறோம். இதுகுறித்த முழு விவரங்களையும் இப்போது பகிரங்கமாக வெளியிடுவது சரியாக இருக்காது.

இந்தியா வின் வர்த்தக அமைச்சரும், அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதியும் மற்றும் இருநாட்டு அதிகாரிகளும் இந்த வர்த்தக ஒப்பந்தத்தை முன்னோக்கி எடுத்துச் செல்லத் தொடர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர். கருத்து வேறுபாடுகள் களையப்பட்டுள்ளன.

அமெரிக்கா போன்ற பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்தும் போது கவனிக்க வேண்டிய ஒன்று அந்த நாட்டுக்கும் நமக்கும் இடையிலான ஒப்பந்தம்; மற்றொன்று போட்டி பொருளாதார நாடுகளுடன் ஒப்பிடும்போது நமது நிலை என்ன என்பதுதான்.

போட்டியிடும்அனைத்து நாடுகளுமே இன்னும் ஒப்பந்தத்தை இறுதி செய்யாததால், அந்தப் பகுதி முழுமையாகத் தெளிவடையவில்லை. ஆனால், இரு நாட்டு வர்த்தக அமைச்சர்களும் இதனைச் சரிசெய்யும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். எனது கணிப்புப்படி, இந்த



வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை விரைவில் ஒரு சுமுகமான முடிவை எட்டும்.

வரிகள் தொடர்பான மோதல்களைத் தீர்க்கவும், வரி அல்லாத தடைகளை நீக்கவும், இருதரப்பு சந்தை அணுகலை அதிகரிக்கவும் இந்தியா மற்றும் அமெரிக்கா இடையேயான இந்த வர்த்தக ஒப்பந்தத்தில் பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன. அமெரிக்கச் சந்தையில் போட்டியிடும் பிற நாடுகளை விட தனது பொருட்களுக்கு சாதகமான வரிச் சலுகைகளை இந்தியா எதிர்பார்க்கிறது.

கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்காவுடன் பரஸ்பரம் பொதுவான நலன்கள் உள்ள பகுதிகளைக் கண்டறிந்து இணைந்து செயல்பட்டு வருகிறோம். அதில் எந்தவொரு அடிப்படை மாற்றமும் ஏற்படவில்லை. இவ்வாறு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

சமீபத்தில் அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி ஜேமிசன் கிரீர் பேசுகையில், அமெரிக்கா வும் இந்தியாவும் இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்யப் பணியாற்றி வருவதாக தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் தொடங்கிய வடகிழக்கு பருவமழை இயல்பாக இருக்கும்

சென்னை: 'தமிழகத்தில் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை இயல்பாக இருக்கும். தென் மாவட்டங்களில் இயல்பை விட அதிகமாகவும், வடமாவட்டங்களில் இயல்பை விட குறைவாகவும், கடலோர மாவட்டங்களில் இயல்பாகவும் வடகிழக்கு பருவமழை இருக்கும். சென்னைமற்றும்புறநகர்பகுதிகளில் அடுத்த இரு நாட்களுக்கு மழைப்பொழிவு இருக்கும். தமிழகத்தில் அடுத்த 2 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்பு உள்ளது.

திருச்சி, பெரம்பலூர், அரியலூர், கரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட 21 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு உள்ளது. தமிழகத்தில் நாளை 28 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது. அடுத்த ஒரு வாரத்தில் வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்பில்லை" என்றார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் இன்று அவர் கூறியது, "இந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் செப்டம்பர் வரையிலான தென்மேற்கு பருவமழை 21 சதவீதம் குறைந்துள்ளது. தென்மேற்கு பருவமழை 2002ல் 45 சதவீதம் குறைவாகவும், 2016ல் 16 சதவீதம் குறைவாகவும் இருந்தது.

தமிழகத்தில் இந்த ஆண்டுக்கான வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளது. தமிழகத்தில் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை

ஆரல்வாய்மொழி அருகே கட்டிடத் தொழிலாளி கொலை; நண்பர்கள் 4 பேர் கைது

குடிபோதையில் கொன்றது அம்பலம்

நாகர்கோவில், அக்.16

குமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி மிஷின் காம்பவுண்ட் பகுதியை சேர்ந்தவர் ஜெகன் (42). கட்டிட தொழிலாளியான இவருக்கு ஜெயராணி என்ற மனைவியும் 8 வயதில் ஒரு மகனும் உள்ளனர். ஜெகன் தனது நண்பர்களை பார்க்க செல்வதாக கூறிவிட்டு வீட்டில் இருந்து நேற்று முன்தினம் புறப்பட்டு சென்றுள்ளார். இந்த நிலையில் அன்று இரவு ஆரல்வாய்மொழி பொய்கை குளத்தின் படித்துறையில் ஜெகன் ரத்த வெள்ளத்தில் பிணமாக கிடந்தார்.

இது குறித்து ஆரல்வாய்மொழி போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று ஜெகனின் உடலை மீட்டு விசாரணைநடத்தினர். அவரது உடலில்வயிறுஉள்ளிட்ட பல்வேறு இடங்களில் கத்தி குத்து காயங்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே அவர் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டதாக தெரிய வந்தது.

இதையடுத்து அவரது நண்பர்களான ஆரல்வாய்மொழி பிள்ளையார் கோவில் தெருவை சேர்ந்த சுதாகர் (29), மருத்துவர் நகரை சேர்ந்த பிரம்ம நாயகம் (28), வடக்கூரை சேர்ந்த மீனாட்சி சுந்தரம் (28), அழகிய நகரை சேர்ந்த சுபாகரன் (26) கொலை செய்தது தெரிய வந்தது. இதையடுத்து அவர்கள் 4 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 4 பேரிடம் விசாரணை நடத்திய போது, ஜெகன் குடிபோதையில் தங்களிடம் தகராறு ஈடுபட்டதாகவும், அப்போது அவர் வைத்திருந்த கத்தியை பிடுங்கி அவரை கொலை செய்ததாகவும் கூறியுள்ளார்கள். கைது செய்யப்பட்டவர்களிடம் மேலும் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

ஏபிஜே அப்துல் கலாம் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் இலவச பொது மருத்துவ முகாம்



கோவை அக்:16

நேருநகர் லயன்ஸ் சங்கம்,ரத்தினம் குளோபல் யுனிவர்சிட்டி, கலாம் மக்கள் அறக்கட்டளை மற்றும் வாசன் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய மாபெரும் இலவசகண் பரிசோதனை,பல் மருத்துவம் மற்றும் பொது மருத்துவ முகாம் ரத்தினம் கல்லூரி வளாகத்தில் சி.வி. ராமன் கட்டிடத்தில் நடைபெற்றது.விஷன் மாவட்டத் தலைவர் MJF ரமேஷ்குமார் தலைமையில் ரத்தினம் கல்லூரி நிர்வாக மேலாண்மை துறைத் தலைவர் M. கௌசல்யா தேவி மற்றும் பன்னாட்டு லயன்ஸ் இயக்கம் 3242 சி ஜி.எம்.டி ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் ஒருங்கிணைப்பில் தர்மம் செய் ஆண்டின் மாவட்ட ஆளுநர் PMJF செல்வராஜ் முன்னாள் மாவட்ட ஆளுநரும் இந்திய மருத்துவ சங்கத்தின் முன்னாள் தலைவருமான பழனிச்சாமி முதலாம் துணை ஆளுநர் வழக்கறிஞர் சூரி.நந்தகோபால் அவர்களும் ரத்தினம் குளோபல் யுனிவர்சிட்டி டிரஸ்டி டாக்டர் சீமா செந்தில் ஆகியோர் இணைந்து முகாமைத் துவக்கி வைத்தனர். மாவட்டத்தின் செயலாளர் முருகேசன்,மகளிர் தின மாவட்ட தலைவர் சுப்பு செந்தில் குமார் முன்னிலையில் முகாமுக்கான ஏற்பாடுகளைநேரு நகர் லயன்ஸ் சங்கத்தின் செயலாளர் லயன் செந்தில் குமார் லயன்சூரியபிரகாஷ்லயன் கிரீஸ் லியோ மாவட்டத் தலைவர் ஜெட்டின் வாசன் கண் மருத்துவமனை பிஆர்ஓ பாபு வி எஸ் பல் மருத்துவமனை பிஆர்ஓ சுனில் மற்றும் கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்கள் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் மருத்துவ முகாமில் பயன்பெற்றனர்.

நாகர்கோவிலில் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை: கால்வாயில் தூர்வாரும் பணிகளை கலெக்டர், அமைச்சர் நேரில் ஆய்வு

நாகர்கோவில், அக்.16

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தற்போது தொடங்கியுள்ளது. இதை முன்னிட்டு, நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து மழைநீர் வடிகால் ஓடைகள் மற்றும் கால்வாய்களைத் தூர்வாரும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, பறக்கின்கால்வாய் மற்றும் காங்கேயன் கால்வாய் பகுதிகளில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ்குமார் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் பிரதாப் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின்போது, கால்வாய்களில் தேங்கியுள்ள மண் மற்றும் கழிவுகளை அகற்றி, மழைநீர்



தடையின்றி வெளியேறுவதற்கு ஏதுவாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர். மேலும், வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் மழைநீர் தேங்குவதால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்க்கும் வகையில், தூர் வாரும் பணிகளை விரைந்து முடிக்கவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவும் அறிவுறுத்தினர்.

இந்த ஆய்வின்போது, நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஆஸ்டின், நாகர்கோவில் மாநகராட்சி மாண்புமிகு மேயர் மேரி பிரின்சி லதா. மாநகராட்சி ஆணையர் ஐஸ்வர்யா மற்றும் மாநகராட்சி அதிகாரிகள், தொடர்புடைய துறை அலுவலர்கள் உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம், நன்னகரம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய குளத்தில் இன்று 15.10.26 தென்காசி வனக்கோட்டம் மற்றும் வனச்சரகம் நடத்திய மாபெரும் பனை விதைகள் நடும் விழாவில் மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் பனை விதைகளை நட்டு துவக்கி வைத்தார். மாவட்ட வன அலுவலர் முனைவர்.ஆர். ராஜ்மோகன், இ.வ.ப., அவர்கள் உடன் உள்ளார்.



திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அக்ஷ்யா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பழனி கல்வி மாவட்டத்திலுள்ள பள்ளி மாணாக்கர்களிடையே போதைப்பொருள் தீமைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு மன்றங்களின் (AntiDrug Club) செயல்பாடுகள் குறித்து நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் துர்காமூர்த்தி தலைமையில் போதைப்பொருள் விழிப்புணர்வு குறித்த உறுதிமொழி ஏற்கப்பட்டது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார், உதவி ஆணையர் (கலால்) தவச்செல்வம், முதன்மைக்கல்வி அலுவலர் செல்வக்குமார் உட்பட பலர் உள்ளனர்.

பர்கூரில் 120 கற்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நடத்தி சீர்வரிசை வழங்கும் விழா

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் தனியார் திருமணமண்டபத்தில்சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை சார்பில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் பர்கூர் வட்டாரம் சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழகம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் முரளிதரன் குத்து விளக்கேற்றி நிகழ்ச்சியை தொடக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மஞ்சள் குங்குமம் பூ பழம் வளையல் புடவை அடங்கிய தட்டுவரிசை சீர்வரிசையாக வழங்கப் பட்டது. முன்னதாக



அனைத்து கர்ப்பிணி பெண்களுக்கும், சாங்கியம் செய்து முகி கொடுத்து மலர் தூவி வாழ்த்தினார்.

இதில் குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் ஜான் சுகந்தி, மேற்பார்வையாளர்கள் ஜோதிலட்சுமி, லட்சுமி விசாலாட்சி மீனாதங்கம் மாள் மற்றும் வழக்கறிஞர் மணிகண்டன், சேலம் மண்டல இணை ஒருங்கிணைப்பாளர் ஜெயசூர்யா, பர்கூர் ஒன்றிய கழக செயலாளர்கள் பசவராஜ், புஷ்பராஜ் சிவபிரசாத், வெங்கடேஷ், பர்கூர் பேரூர் கழக நிர்வாகிகள் பிரித்திவிராஜ், காவேரிப்பட்டணம் கிழக்கு ஒன்றிய கழக கௌதம், யோகேஷ் மற்றும் மகளிர் அணி தீபா, பவித்ரா, ஹேமா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

புதுக்கடை அருகே அனுமதி இன்றி அதிக அளவில் கனிம வளம் கடத்தல்

ஒருவர் மீது வழக்கு பதிவு

புதுக்கடை, அக்.16

புதுக்கடை அடுத்த விளாத்துறை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிபவர் பிரதீபா (39). இவருக்கு அதே கிராமப் பகுதியில் உள்ள ஒரு தனி நபரின் நிலத்தில் இருந்து அதிக அளவில் செம்மண் உள்ளிட்ட கனிம வளங்கள் கடத்துவதாக புகார் கிடைத்தது. இதை அடுத்து அவர் சம்பவ தினம் அந்த இடத்திற்கு சென்று பார்வையிட்டார். அப்போது அதே பகுதியை சேர்ந்த ராஜேஷ் பாபு என்பவரது நிலத்திலிருந்து உரிய அனுமதி இல்லாமல் சுமார் 1500 யூனிட் செம்மண் உள்ளிட்ட கனிம வளத்தை திருட்டுத்தனமாக எடுத்து கடத்தியது தெரிய வந்தது. திருட்டுத்தனமாக கடத்திய கனிம வளங்களின் மதிப்பு ரூ.7 லட்சத்து 2 ஆயிரம் ரூபாய் என தெரிய வருகிறது. இதையடுத்து கிராம நிர்வாக அலுவலர் பிரதிபா புதுக்கடை போலீசில் இது குறித்து புகார்அளித்தார். போலீஸ் இன்ஸ்பெக்டர் மீனா வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறார்.

குமரியில் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் அமைச்சர் துவக்கி வைத்தார்



நாகர்கோவில், அக்.16 நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பறக்கை பகுதியில் இந்தியன் ஓவர் சீஸ் வங்கியின் சார்பில் புதிதாக ஊரக சுயவேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனம் அமைக்கப்பட்டது. இதன் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமையில் நாகர்கோவில் சட்ட மன்ற உறுப்பினர் எஸ். ஆஸ்டின் முன்னிலை வகித்தார்.

சுற்றுலாத்துறைஅமைச்சர் செ.ராஜேஷ் குமார் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். பின்னர் அவர் பேசியதாவது: கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராமப்புற இளைஞர்கள் மற்றும் பெண்கள் சுயமாகத் தொழில் புரிந்து முன்னேறும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையத்திற்காக சுமார் ரூ.3.75 கோடி செலவில் புதிய சொந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. நீண்ட நாட்களாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த இந்நிறுவனம் தற்போது சொந்த கட்டடத்தில் செயல்படவுள்ளது. படிப்பு முடித்தவுடன் வேலைக்குச் செல்வதில் ஏற்படும் சிரமங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு, இந்நிறுவனத்தின் மூலம் கிராமப்புற இளைஞர்கள் மற்றும் பெண்கள் தங்களின் திறன்களை வளர்த்துக் கொண்டு சுயசார்புடன் இயங்க ஏதுவாக பல்வேறு தொழிற்பயிற்சிகள் வழங்கபடவுள்ளது. குறிப்பாக செல்போன் பழுதுபார்த்தல், அழகுகலை பயிற்சி, ஆரி வேலைப்பாடு, தையல் பயிற்சி, இருசக்கர வாகன பழுதுபார்த்தல், புகைப்படக் கலை மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்படும். இவ்வாறு அமைச்சர் பேசினார்.

தொடர்ந்து பயிற்சி முடித்து, சுயத்தொழில் நடத்திவரும் 20 தொழில் முனைவோர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும் புதிதாக பயிற்சி பெற வந்த இளைஞர்களுக்கு பயிற்சிக்கு தேவையான பொருட்கள் வழங்கப்பட்டது. நடைபெற்ற நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் (பொ) மேரி பிரின்சி லதா, இந்தியன் ஓவர்சிஸ் வங்கி மண்டல மேலாளர் செந்தில் குமார், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் செல்வராஜ், ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மைய இயக்குநர் முனைவர்.ஆல்பாஜி லினஸ் மற்றும் துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் நவராத்திரி விழாவை முன்னிட்டு நான்காம் நாள் அன்னை மீனாட்சி பட்டாபிஷேக திருக்கோலத்தில் காட்சியளித்தார்.

தகவல் ஆணையாளர் திருப்பூர் வருகை!



திருப்பூர், அக்.16 வி.பி.ஆர் .இளம்பரிதி அவர்களை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் சந்தித்த சமூக ஆர்வலர் இடுவம்பாளையம்ரவிகடந்த ஆட்சியில் தமிழக கவர்னர் ஆர் ,எம் ,ரவி அவர்களிடம் பொதுமக்கள் அரசு அலுவலகங்களில் தீர்க்கப்படாத மனுக்கள் நிலுவையில் இருப்பதால் ஆணையர்கள் நிரப்பப்படாமல் உள்ளனர் , ஆகவே காலிப்பணியிடங்கள் நிரப்ப படவேண்டும் என நுகர்வோர் அமைப்பினர், சமூக ஆர்வலர்கள் சார்பில் மனு கொடுக்க பட்டது. அதன் அடிப்படையில் நேர்மைமிகு இரு வழக்கறிஞர்கள் தகவல் ஆணையாளர்களாக எம். நடேசன், வி . பி . ஆர் . இளம் பரிதி, நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். திருப்பூர் மாவட்டஆட்சியர் அலுவலகத்தில் விழிப்புணர்வு நிகழ்வு மற்றும் நிலுவையில் உள்ள மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என திருப்பூர் மாநகராட்சி மற்றும் மாவட்டத்தில் பணிபுரியும் அனைத்து அரசு அலுவலர்களும், பொதுமக்களின் அனைத்து கோப்புகளுக்கும் உடனே தீர்வு காணப்பட வேண்டும் என்று உத்தரவிட்டார்...

திண்டுக்கல்லில், முதலமைச்சர் கோப்பை2026 மாநில கபாடி போட்டி

மாவட்ட ஆட்சித்தலைவர் தொடங்கி வைத்து உரையாற்றினார்



திண்டுக்கல், அக்.16 திண்டுக்கல் மாவட்டம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை2026 பள்ளி மாணவர் பிரிவுக்கான கபாடி போட்டியினை மாவட்ட ஆட்சித் தலைவர் துர்கா மூர்த்தி, நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அய்யனார் முன்னிலையில் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது, பள்ளி மாணவர்களுக்கான பிரிவில், முதலமைச்சர் கோப்பை 2026க்கான மாநில அளவிலான கபாடி போட்டிகள், திண்டுக்கல் ஜி.டி.என் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்சிறப்பாகதொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மாவட்டநிர்வாகத்துடன், திண்டுக்கல் ஜி.டி.என் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நிர்வாகம் மற்றும் பி.எஸ்.என்.ஏ. கல்லூரி நிர்வாகம் இணைந்து மாநில அளவிலான கபாடி மற்றும் பூப்பந்து போட்டிகளை சிறப்பாக நடத்திட ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர். இத்தருணத்தில் மேற்கண்ட கல்லூரி நிர்வாகத்தினருக்கு பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், திண்டுக்கல் மாவட்டத்தில் மாநில அளவிலான கபாடி மற்றும் பூப்பந்து போட்டிகளானது வருகின்ற 28.10.2026 வரை நடைபெறவுள்ளது. அதில், கபாடி போட்டியானது பள்ளி மாணவியர்களுக்கான பிரிவில் 20.10.2026 முதல் 22.10.2026 வரையிலும் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான பிரிவில் 18.10.2026 முதல் 20.10.2026 வரையிலும், கல்லூரி மாணவியர்களுக்கான பிரிவில் 23.10.2026 முதல் 25.10.2026 வரையிலும் ஜி.டி.என் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது. பொதுப்பிரிவில் கபாடி போட்டியானது பெண்களுக்கான பிரிவில் 26.10.2026 மற்றும் 27.10.2026 ஆகிய தேதிகளிலும், ஆண்களுக்கான பிரிவில் 27.10.2026 மற்றும் 28.10.2026 ஆகிய தேதிகளிலும் திண்டுக்கல் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் நடைபெற வுள்ளது. பூப்பந்து போட்டியானது கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான பிரிவில் 23.10.2026 மற்றும் 24.10.2026 ஆகிய தேதிகளில் திண்டுக்கல் பி.எஸ்.என்.ஏ பொறியியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது. மாநில அளவிலான கபாடி மற்றும் பூப்பந்து போட்டிகளில் வெற்றி பெறும் அணியினருக்கு முதல் பரிசுத்தொகையாக தலா ரூ.75,000/மும், இரண்டாம் பரிசுத்தொகையாக தலா ரூ.50,000/மும், மூன்றாம் பரிசுத் தொகை தலா ரூ.25,000/மும் வழங்கப்படவுள்ளது. எனவே, இதுபோன்ற விளையாட்டுப் போட்டிகளில் அனைத்து தரப்பினரும் ஆர்வத்துடன் பங்கேற்று, சிறந்து விளங்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர்துர்காமூர்த்தி தெரிவித்தார். இந்நிகழ்வில், திண்டுக்கல் ஜி.டி.என் கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் ரெத்தினம், திண்டுக்கல் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் சிவா, சிவகங்கை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ரமேஷ் கண்ணன்உட்படதுறைசார்ந்த அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

ஈரோடு எல்லப்பாளையம், கொங்கம்பாளையத்தில் பாதியில் நிற்கும் பணிகளை முடிக்கக் கோரி மனு



ஈரோடு அக்டோபர் 16 ஈரோடு மாநகராட்சி மண்டலம் 2, 5வது வார்டுக்குட்பட்ட எல்லப்பாளையம் ஸ்ரீ செல்லியம்மன் நகர், கொங்கம்பாளையம், கங்காபுரம் ஆகிய பகுதிகளில் சாலை, சாக்கடை மற்றும் குடிநீர் வசதிகளை ஏற்படுத்தித் தரக்கோரி பொதுமக்கள் சார்பில் மாநகராட்சி கண்காணிப்பு பொறியாளர் மனு அளிக்கப்பட்டது. 5வது வார்டு மாமன்ற உறுப்பினர் கௌசல்யா சிவக்குமார் தலைமையில் வந்த பொதுமக்கள் இந்த மனுவை வழங்கினர். அதில், ஸ்ரீ செல்லியம்மன் நகர் பகுதியில் சாக்கடை மற்றும் சாலை அமைக்கும் பணிகள் தொடங்கி எட்டு மாதங்களாகியும் இன்னும் முடிக்கப்படாமல் பாதியில் நிற்பதாகத் தெரிவித்துள்ளனர். பணிகளுக்காக வீடுகளின் வாசற்படிகள் இடிக்கப்பட்டதால் முதியவர்கள் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இருசக்கர வாகனங்களை வீடுகளுக்குள் நிறுத்த முடியாமல் சாலையில் நிறுத்த வேண்டியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். மேலும், எல்லப்பாளையம், கங்காபுரம் பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும், கொங்கம்பாளையத்தில் தார்ச்சாலை அமைக்கும் பணி பாதியில் நிறுத்தப்பட்டு ஜல்லிக் கற்கள் மட்டுமே பரப்பப்பட்டுள்ளதால் பொதுமக்களும் வாகனஓட்டிகளும் விபத்து அபாயத்தை எதிர்கொள்வதாகவும் மனுவில் சுட்டக்காட்டியுள்ளனர். மனுவைப் பெற்றுக் கொண்ட கண்காணிப்பு பொறியாளர் பாக்கியலட்சுமி, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளை நேரில் அழைத்து, குடிநீர் வசதி உள்ளிட்ட பாதியில் நிறுத்தப்பட்ட பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்.

பிரகாஷ் எம் பி தலைமையில் ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் ஒருங்கிணைப்பு குழு கூட்டம்



ஈரோடு, அக். 15 ஈரோடு மாவட்ட ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம் ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில்ஈரோடுதி.மு.க., எம்.பி., பிரகாஷ் தலைமையில் நடந்தது. திருப்பூர் எம்.பி., சுப்பராயன், கலெக்டர் கந்தசாமி, மேயர் நாகரத்தினம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் பொதுவாக நடந்து வரும் திட்டப்பணிகள் குறித்து எம் பி எம்.பி., பிரகாஷ் ஆய்வு செய்தார். அப்போது கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் மத்திய அரசின் நிதி மூலம் மேற் கொள்ளப்படும் பணியில் பல இடங்களில் தொய்வு உள்ளது. அரசின் ஒத்துழைப்பு குறைவாக உள்ளது. ஏற்கனவே டெண்டர் போடப்பட்ட சாலைப் பணிகளை நிறுத்தி வைத்தும், பில்களுக்கான நிதி விடுவிக்காமலும் உள்ளனர். ஐந்து மாதமாக புதிய திட்டங்கள் அறிவிக்காமல் கிடப்பில் உள்ளது . இனி வரும் காலங்களில் அரசியல் காழ்ப்பு ணர்ச்சியை தவிர்த்து மாவட்ட வளர்ச்சிக்காக வேலை செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்

அப்துல் கலாம் பிறந்தநாளில் KGF திட்டத்தைத் தொடங்கி வைத்த சட்டமன்ற உறுப்பினர் கனிமொழி சந்தோஷ்!

கோவை, அக். 16: இளைஞர்கள் அரசு நிர்வாகத்தின் செயல்பாடுகளையும், மக்கள் பிரதிநிதிகளின் பணிகளையும் நேரடியாக அறிந்துகொள்ளும் வகையில், கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கனிமொழி சந்தோஷ் முன்னெடுத்துள்ள KGF (Kavundampalayam Governance Fellowship) திட்டம், டாக்டர்ஏ.பி.ஜே.அப்துல் கலாம் பிறந்தநாளை முன்னிட்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட இளைஞர்கள், ஆறு மாதங்கள் எம்.எல்.ஏ. கனிமொழி சந்தோஷுடன் இணைந்து செயல்பட்டு, தொகுதி மக்களின் கோரிக்கைகள், அரசு நிர்வாகத்தின் செயல்பாடுகள் மற்றும் மக்கள் நலப் பணிகள் குறித்து நேரடியாகக் கற்றுக்கொள்ள உள்ளனர்.

திட்டத்தின் முதற்கட்டமாக, தேர்வு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு அடையாள அட்டைகள் மற்றும் பயிற்சிக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் பேசிய கனிமொழி சந்தோஷ் எம்.எல்.ஏ., அப்துல் கலாம் பிறந்தநாளில் சமூக அக்கறையுடன் வந்துள்ள இளைஞர்களுடன் இணைந்து பயணிப்பதில் மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்தார். மேலும், இந்த ஆறு மாதப் பயிற்சி மூலம் அரசு நிர்வாகம் எவ்வாறு செயல்படுகிறது, மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்புகள் என்ன, சமூக வளர்ச்சியில் குடிமக்களின் பங்கு என்ன என்பவற்றை இளைஞர்கள் நடைமுறை அனுபவத்தின் வாயிலாக அறிந்து கொள்ள முடியும் என்றும் கூறினார். இப்பயிற்சி இளைஞர்களின் எதிர்காலத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் பயனுள்ளதாக அமையும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.



காவேரி மருத்துவமனை அதிநவீன 'எக்மோ' பல்லுறுப்பு உயிர் காக்கும் சிகிச்சை பிரிவு காவேரி அறிமுகம்



சென்னை, அக்16, சென்னை வடபழனியில் உள்ள காவேரி மருத்துவமனை, இதயம் மற்றும் நுரையீரலின் செயல்பாடுகளை செயற்கையாகப் பூர்த்தி செய்யும் அதிநவீன எக்மோ' கருவிகளை கொண்ட பிரத்யேகப் பிரிவை அறிமுகப்படுத்தியுள்ளது. இப்பிரிவு, சிறுநீரகம் உள்ளிட்ட உடலின் பிற உறுப்பு செயலிழப்புகளுக்கும் விரிவான அவசர சிகிச்சைகளை வழங்கும்.

புதிதாக தொடங்கப்பட்டுள்ள எக்மோ மற்றும் பல்லுறுப்பு உயிர் காக்கும் பிரிவில் கடுமையான சுவாச செயலிழப்புக்கான விவிஎக்மோ இதய செயலிழப்புக்கான வி எக்மோ, இதயம் மற்றும்நுரையீரல் ஆகிய இரண்டும் ஒரே நேரத்தில் செயலிழக்கும் நிலையில் பயன்படுத்தப்படும்விஏவிஎக்மோ, நோயாளியை விழித்திருக்கும் நிலையில் வைத்திருக்கும் அவேக் எக்மோ, சாலை மற்றும் வான்வழியில் நோயாளிகளை மருத்துவமனைக்கு கொண்டு வரும் போது பொருத்துவதற்கான எக்மோ போன்ற பல்வேறு சிறப்பு எக்மோ கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அறிமுகப்படுத்தப்பட்டுள்ள எக்மோ கருவிகள் மற்றும்மருத்துவசேவைகளை குறித்து டாக்டர் மதன்குமார்கூறுகையில், செயலிழப்பு வழக்கமான சிகிச்சைகளுக்குப் பலனளிக்காத போது, எக்மோ தற்காலிக உயிர் ஆதரவை வழங்குகிறது. பல நேரங்களில் எக்மோ சிகிச்சை தொடரும் போதே பிற உறுப்புகளுக்கும் அவசர சிகிச்சைகள் தேவைப்படலாம். இந்நிலைகளில் அதற்கேற்ற மேம்பட்ட சிகிச்சைகளை வழங்கும் பல்நோக்கு மருத்துவக் குழுவும் தேவை. இவற்றை கருத்தில் கொண்டு இப்புதிய பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. என்றார்.

காவேரி மருத்துவமனை குழுமத்தின் இணை நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர்அரவிந்தன்செல்வராஜ் கூறுகையில்: "குறிப்பாக நோயாளியின் தேவைகள் வேகமாக மாறும் போது, சரியான நிபுணர்கள், தொழில்நுட்பம் மற்றும் மருத்துவ அனுபவத்தின் மூலமே சிக்கலான மருத்துவச் சூழல்களைக் கையாள முடியும். காவேரி மருத்துவமனையில், தீவிரமான மற்றும் சிக்கலான உடல்நலப் பாதிப்புகள் கொண்ட நோயாளிகளுக்குத் தேவையான அனைத்துப் பராமரிப்புகளையும் ஒரே இடத்தில் அளிக்கும் வகையில், ஒருங்கிணைந்த மருத்துவ சேவைகளை வழங்குவதிலேயே நாங்கள் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறோம்," என்றார்.

சேலம் மாவட்டத்தில் காமராஜர் காலை உணவுத் திட்ட விரிவாக்கம்: 75,175 மாணவர்கள் பயன்!

சேலம்: சேலம் மாவட்டத்தில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரைவிரிவாக்கம் செய்யப்பட்டதன்மூலம், 669 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 75,175 மாணவ, மாணவியர்கள் பயனடைந்து வருகின்றனர். தமிழக முதல்வர் கடந்த செப்டம்பர் 22ம் தேதி சென்னை திருவான்மியூர் காந்திகிராம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் இத்திட்டத்தை தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து, சேலம் அம்மாபேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் திட்டம் விரிவாக்கம் செய்து தொடங்கப்பட்டது. ஏற்கனவே சேலம் மாவட்டத்தில் 1,501 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 94,006 மாணவ, மாணவியர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர். தற்போது உயர் வகுப்புகளுக்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் பயனாளிகளில்ஒருவரானமணக்காடு காமராஜர் நகரவை பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி கௌசல்யா கூறுகையில், தனது தாயார் தினமும் காலை 6 மணிக்கே வேலைக்குச் செல்வதால், சில நாட்களில் காலை உணவு கிடைக்காமல் பள்ளிக்குச் செல்ல வேண்டிய நிலை இருந்ததாகத் தெரிவித்தார்.

தற்போது பள்ளியிலேயே சத்தான காலை உணவு கிடைப்பதால், பசியின்றிப் படிக்கவும் வகுப்புகளில் கவனம் செலுத்தவும் முடிவதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். மாணவர்களின் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதுடன், கல்வியில் கவனம் செலுத்தவும், பள்ளி வருகையை ஊக்குவிக்கவும் இத்திட்டம் உதவுகிறது.

திருவள்ளூரில் பாதாள சாக்கடை பணி: பகலில் நீடித்ததால் கடும் போக்குவரத்து நெரிசல் வாகன ஓட்டிகள், பள்ளி மாணவர்கள் அவதி

திருவள்ளூர்: திருவள்ளூர் நகரின் மையப் பகுதியான ஜெ.என்.சாலையில் மில் அருகே நடைபெற்று வரும் பாதாள சாக்கடை பணி காரணமாக, இன்று காலை முதல் பல மணி நேரம் போக்குவரத்து முடங்கியதால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளானர். திருவள்ளூர் ரயில் நிலையம் மற்றும் பூந்தமல்லி மணவாள நகர் செல்லும் பிரதான சாலையான இந்த ஜெ.என். சாலையில், நாள்தோறும் மணிக்கு ஆயிரக்கணக்கான வாகனங்கள் சென்று வருகின்றன.

இந்த சாலையில் பாதாள சாக்கடை அமைக்கும் பணி நேற்று இரவு தொடங்கப்பட்டது. ஆனால், பணிகள் நிர்ணயித்த நேரத்தில் முடிவடையாததால், பகல் நேரத்திலும் பணி தொடர்ந்தது. இதனால் சாலை முழுமையாக அடைக்கப்பட்டு, காலை 7 மணி முதல் போக்குவரத்து முற்றிலும்துண்டிக்கப்பட்டது. இதனால்பள்ளி, கல்லூரிக்கு சென்ற மாணவர்கள், அலுவலகம் செல்வோர் என ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப் பட்டனர். வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்துக்கிடந்ததால் சுமார் 2 கி.மீ. தூரத்திற்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.



எனவே, போக்குவரத்து நெரிசல்மிகுந்த இதுபோன்ற முக்கியசாலைகளில்பாதாள சாக்கடை பணிகளை இரவு நேரத்திலேயே விரைந்து முடிக்க திருவள்ளூர் நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனபொதுமக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.



கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் P. முகுந்தன் MLA உத்தரவின் படி கழகத் தலைமையின் அறிவுறுத்தலின் படி, பெண்களின் முன்னேற்றமே நமது முன்னேற்றம் வெற்றிப் பயணம் திட்டம் மகளிர் கட்டணமில்லா "இலவச புதிய பேருந்து தொடக்க விழா" கிருஷ்ணகிரிவெப்பனபள்ளிகோங்கனப்பள்ளி வரை துவக்கம் பழைய பேருந்து நிலையத்தில் நடைபெற்றது இந்த இனிய நிகழ்ச்சி நமது கிருஷ்ணகிரி மத்திய நகர கழக செயலாளர் சசிகுமார்துவக்கிவைத்தனர்ஒன்றிய செயலாளர்சங்கர். சந்திரசேகர். கோவிந்தராஜ். நகரநிர்வாகிகள் மற்றும் வார்டு நிர்வாகிகள் இவ்விழாவில் கலந்து கொண்டுள்ளனர்

குமரி அரசு குழந்தைகள் காப்பகத்தில் நவராத்திரி திருவிழா ;கலெக்டர் கலந்து கொண்டார்



நாகர்கோவில், அக்.16 கன்னியாகுமரி மாவட்ட குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ் பறக்கின் கால் பகுதியில் கடந்த 17 வருடமாக செயல்பட்டு வரும் அன்னை சத்தியா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகத்தில் வைத்து நவராத்திரி திருவிழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி வைத்து சிறப்பு பூஜை செய்தார். மேலும் இல்லத்தில் 31 குழந்தைகள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். அக்குழந்தைகளுடன் அமர்ந்து பூஜை செய்து பிரசாதம் உண்டு மகிழ்ந்து குழந்தைகளுக்கும் வழங்கினார். விழாவில் மாவட்ட குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் பணியாளர்களால் சிறப்பு கொலு அமைக்கப்பட்டிருந்தது. இவ்விழா வானது தொடர்ந்து 9 நாட்கள் நடத்தப்பட உள்ளது. தொடர்ந்து காப்பகத்தில் தங்கியுள்ள குழந்தைகளின் தங்குமிடம், உணவு வசதி, அடிப்படைச் சுகாதார வசதிகள் மற்றும் கல்விச் சூழல் குறித்து கேட்டறிந்தார்கள். மேலும் காப்பக வளாகத்தின் தூய்மை மற்றும் பாதுகாப்பினையும் நேரில் ஆய்வு செய்தார்கள். குழந்தைகளின் பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் கூடுதல் கவனத்துடனும் அர்ப்பணிப்புடனும் செயல்படவும் இல்லப் பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார். இவ்விழாவில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ரஞ்சித்குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரின்ஸ் ஆரோக்கிய ராஜ், துறை அலுவலர்கள், இல்ல பணியாளர்கள், குழந்தைகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

திருவள்ளூர் மாவட்டத்தில் பரவலாக கனமழை வெப்பம் தணிந்ததால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி



திருவள்ளூர் மாவட்டம் முழுவதும் இன்று பரவலாக பலத்த மழை பெய்தது. இதனால் கடந்த சில நாட்களாக நிலவி வந்த வெப்பம் தணிந்து, குளிர்ச்சியான சூழல் நிலவுகிறது.

திருவள்ளூர், கனகம்மாசத்திரம், திருத்தணி, பள்ளிப்பட்டு, பொதட்டூர்பேட்டை, ஆர்.கே.பேட்டை உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இன்று காலை முதல் வானம் மேகமூட்டமாக காணப்பட்டது. கடந்த ஒரு வாரமாகவே கடும் வெயில் வாட்டி வதைத்து வந்தது. வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததால் பொதுமக்கள் வீடுகளில் முடங்கியிருந்தனர். இந்நிலையில் இன்று காலை முதல் திடீரென வானம் மேகமூட்டமாக மாறி, இடி காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்யத் தொடங்கியது. சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த இந்த மழையால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கிய து. மழையின் காரணமாக வெப்பம் முற்றிலும் தணிந்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். குறிப்பாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தற்போது பெய்து வரும் இந்த மழை, நெல், நிலக்கடலை உள்ளிட்ட பயிர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

மேலும் வரும் நாட்களிலும் மழை தொடரும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது



கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, பழைய மருத்துவமனையில், தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் சட்டமன்ற உறுப்பினர்கள் .பா.முகுந்தன்.கிருஷ்ணகிர.நா.இளையராஜா ஊத்தங்கரை ஆகியோர் தொடங்கி வைத்து, குழந்தைகளுக்கு ஒரு கிராம் தங்க மோதிரங்களை வழங்கினார்கள்.

கன்னியாகுமரி பூம்புகார் போக்குவரத்து ஊழியர்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்



கன்னியாகுமரி அக் 16 பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கன்னியாகுமரி பூம்புகார் ஷிப்பிங் கார்பரேஷன் எம்ப்ளாயிஸ் யூனியன் ஒப்பந்த தொழிலாளர்கள் நேற்று கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்

தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்து, 10 மாதங்களுக்கும் மேலாக ஒப்பந்ததாரரால் கட்டப்படாமல் உள்ள இபிஎஃப், இஎஸ்ஐ பணம் சுமார் 20 லட்சத்தை தொழிலாளர்கள் கணக்கில் கட்ட வேண்டும். நேரடியாக தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கும் நடைமுறையை ஏற்படுத்த வேண்டும். .பூம்புகார் நிறுவன தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் ஒப்பந்த பணியாளர்களுக்கு மாதத்தில் ஒருமுறை ஊதியத்துடன் தற்செயல் விடுப்பு அளிப்பதைப் போல் கன்னியாகுமரி பூம்புகார் படகுத்துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டும். . கடந்த பல வருடங்களாக ஒப்பந்த பணியாளர்கள் ஊதியம் உயர்த்தப்படாமலே உள்ளது. உடனடியாக பணியாளர்களின் ஊதியத்தை உயர்த்தி வழங்குவதோடு வருடா வருடம் 10 சதவீதம் ஊதிய உயர்வு வழங்கிட நடவடிக்கை எடுத்திட வேண்டும். உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக ஒப்பந்த தொழிலாளர்கள் நேற்று காலை கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்திற்கு பூம்புகார் ஷிப்பிங் கார்பரேஷன் எம்ப்ளாயிஸ் யூனியன் தலைவர் ரசல் தலைமை வகித்தார். சிஐடியு மாநில துணை தலைவர் தங்கமோகன் ஆர்பாட்டத்தை துவக்கி வைத்தார். ஆர்பாட்டத்தில் அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் பாபு, சிஐடியு மாவட்ட துணை தலைவர் அந்தோணி, பூம்புகார் ஷிப்பிங் கார்பரேஷன் எம்ப்ளாயிஸ் யூனியன் செயலாளர் விஸ்வநாத், மற்றும் நிர்வாகிகள் முத்துவேல் பிள்ளை, துணை செயலாளர்கள் ஸ்ரீதரன், ஜெயசந்திரன், திமுக நிர்வாகிகள் நிசார், ஆன்றனி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு கண்டன கோஷங்கள் எழுப்பினர்.

கன்னியாகுமரியில் காளிமலை சமுத்ரகிரி ரதயாத்திரை தொடங்கியது



கன்னியாகுமரி, அக்.16 கன்னியாகுமரி கேரள எல்லையான பத்துகாணி அருகே உள்ள பிரசித்தி பெற்ற காளிமலை பத்ரகாளி அம்மன் கோயிலுக்கு துர்காஷ்டமி விழாவை முன்னிட்டு ஆண்டுதோறும் பக்தர்கள் ஆன்மீகப் புனிதயாத்திரை மேற்கொள்கின்றனர். இந்த ஆண்டு புனிதயாத்திரை நேற்று காலை கன்னியாகுமரியில் தொடங்கியது

காலை 8 மணிக்கு கன்னியாகுமரி முக்கடல் சங்கமத்தில் சமுத்ர பூஜையும். தொடர்ந்து, கும்பத்தில் புனித நீர் எடுக்கப்பட்டு 8.45 மணிக்கு சமுத்ரகிரி ரதயாத்திரையின் தொடக்க விழா நடந்தது.

விழாவுக்கு விழாக்குழுத் தலைவர் பத்மகுமார் தலைமை வகித்தார். வெள்ளிமலை ஹிந்து தர்ம வித்யா பீடத் தலைவர் சுவாமி சைதன்யானந்தஜி மஹராஜ் ஆசியுரை வழங்கினார். புனிதயாத்திரையை நீலகிரி தொகுதி பாஜக எம்எல்ஏ பாஜ ராஜன் சிறப்புரையாற்றி, கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

,ஆண்டாள் பக்தர் பேரவை நிறுவனர் ஆண்டாள் சொக்கலிங்கம், இந்து ஐக்கியவேதி கேரள மாநிலச் செயலர் பிரபாகரன், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் எம்.ஆர். காந்தி உள்ளிட்ட தமிழக, கேரள மாநிலங்களைச் சேர்ந்த முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்றனர்.

ரதயாத்திரையொட்டி சிலம்பம், தற்காப்புக் கலைகள், யானை, ஒட்டகம், வாடிப்பட்டி மேளம், தேவராட்டம், ஆழியாட்டம், காவடியாட்டம், தையம், சிங்காரி மேளம் உள்ளிட்ட பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மேலும், நூற்றுக்கணக்கான பக்தர்கள் முத்துக்குடை ஏந்தி அணிவகுத்து ஆன்மிகம், பாரம்பரியம் மற்றும் கலாசாரத்தைப் பறைசாற்றும் வகையில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் இருமுடி கட்டி, புனிதநீர்சுமந்து பாதயாத்திரையாகவும் ரதத்துடனும் சென்றனர்.

அரசூர் அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்

அலுவலர்களுக்கு ஆட்சியர் சரவணன் அறிவுரைத்தல்



தருமபுரி அக்.16 தருமபுரி மாவட்டம் அரூர் அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் சரவணன் நேரில் ஆய்வு மேற்கொண்டார். இந்த மருத்துவமனை வளாகத்தில் உள்ள புற நோயாளிகள் பிரிவு, நோயாளிகள் பதிவு, செய்யும் இடம், நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவு தயாரிப்பு இடம், மருந்தகம் உள்ளிட்ட சிகிச்சை பிரிவுகளை அவர் பார்வையிட்டார். நோயாளிகள் பதிவு செய்யும் பிரிவில் பதிவு விவரம், பதிவுகள் மேற்கொள்ளும் பணிகள் குறித்து பணியாளர்களிடம் அவர் கேட்டறிந்தார். இதனைத் தொடர்ந்து தீவிர சிகிச்சை பிரிவு, அவசர காலப்பிரிவு, பொது மருத்துவ பிரிவு, பெண்கள் நலத் பிரிவு ,குழந்தைகள் நலப்பிரிவு உள்ளிட்ட பிரிவுகளில் ஆய்வு செய்து நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் பற்றியும், தாய் மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும் சம்பந்தப்பட்டதுறை அலுவலர்கள் மற்றும் டாக்டர்களிடம் ஆட்சியர் ஆலோசனை நடத்தினார் .இந்த ஆய்வின் போது அரூர் அரசு மருத்துவமனையில் புற நோயாளிகளுக்கு தரமான மருத்துவ சிகிச்சை வழங்க வேண்டும். குறிப்பாக மருத்துவமனை வளாகத்தை தூய்மையாக பராமரிக்க வேண்டும். நோயாளிகளுக்கு தேவையான குடிநீர், மின்சாரம், கழிவறை உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளை முறையாக செய்து கொடுக்க வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மற்றும் டாக்டர்கள் உறுதி செய்ய வேண்டும் என்று கூறினார்.

புதுக்கடையில் பொது இடத்தில் மது அருந்தியவர் கைது

புதுக்கடை, அக்.16 புதுக்கடை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் லாரன்ஸ் தலைமையிலான போலீசார் நேற்று புதுக்கடை சந்திப்பு பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது தேங்காப்பட்டணம் முள்ளூர்துறை பகுதியை சேர்ந்த வர்கீஸ் (60) என்ற கடல் தொழில் செய்யும் மீனவர் அந்தப் பகுதியில் பொது இடத்தில் நின்று டாஸ்மாக் மதுபானத்தை குடித்துக் கொண்டிருந்ததை கண்டுபிடித்தனர்.

இதை அடுத்து மதுபானத்தை பறிமுதல் செய்து வர்க்கீசை பிடித்து, பொது இடத்தில் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக அவர் அவர் மீது வழக்கு பதிவு செய்தனர்.



பனிக்கட்டியில் வழுக்கி விழுந்து தண்டுவடம் பாதிப்பு: 65 வயது முதியவருக்கு மறுவாழ்வு அளித்த டாக்டர் மேத்தா மருத்துவமனை



சென்னை, அக். 16: சிம்லாவில் உறைந்த பனிக்கட்டியில் வழுக்கி விழுந்து தண்டுவட பாதிப்பால் கை, கால்கள் செயலிழந்த 65 வயது முதியவருக்கு, சென்னை வேலப்பஞ்சாவடியில் உள்ள டாக்டர் மேத்தா மருத்துவமனை வெற்றிகரமாக சிகிச்சை அளித்து மீண்டும் நடக்க உதவியுள்ளது. சென்னையைச் சேர்ந்த அந்த முதியவருக்கு ஏற்கனவே நீண்ட நாட்களாகக் கழுத்து வலி இருந்துள்ளது. இந்நிலையில், கடந்த பிப்ரவரி மாதம் சிம்லாவுக்குச் சென்றிருந்தபோது பனிக்கட்டியில் வழுக்கி விழுந்ததில் கழுத்தில் காயம் ஏற்பட்டது. இதனால் அவரால் நடக்கவும், கை, கால்களை அசைக்கவும் முடியாத நிலை ஏற்பட்டது. இதுகுறித்து மருத்துவமனையின் முதுகெலும்பு அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் கணேஷ் குமார் கூறுகையில், ஏற்கனவே இருந்த நரம்பு சுருக்கம் காரணமாகச் சிறிய விபத்துகூட கடுமையான தண்டுவட பாதிப்பை ஏற்படுத்தியதாகத் தெரிவித்தார். நவீன நரம்புக் கண காணிப்புத் தொழில்நுட்பத்தின் உதவியுடன் அறுவை சிகிச்சை பாதுகாப்பாக மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறினார். மருத்துவமனையின் மருத்துவ இயக்குநர் டாக்டர் எஸ். ரமேஷ்பாபு கூறுகையில், சிக்கலான பாதிப்புகளுக்கு அறுவை சிகிச்சையுடன் தீவிர சிகிச்சை மற்றும் மறுவாழ்வுப் பயிற்சியும் அவசியம் என்றார். ஒருங்கிணைந்த மருத்துவக் கவனிப்பின் மூலம் முதியவர் மீண்டும் நடக்க உதவியதாகவும் தெரிவித்தார். மேலும், நீண்டகாலக் கழுத்து வலியை அலட்சியப்படுத்தாமல் மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம் என்றும் மருத்துவர்கள் வலியுறுத்தினர்.

ஈரோடு சுப்பிரமணிய நகரில் சிறப்புக் கழிவுகள் அகற்றம் பொதுமக்களுக்கு சுகாதார விழிப்புணர்வு



ஈரோடு அக்டோபர் 16 ஈரோடு மாநகராட்சி 19 வது வார்டுக்குட்பட்ட சுப்பிரமணிய நகர் பகுதியில், பொது சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சிறப்புக் கழிவுகள் சேகரித்து அகற்றும் பணி நடைபெற்றது. இப்பணியை சுகாதார ஆய்வாளர் நேரில் பார்வையிட்டு ஒருங்கிணைத்தார். தூய்மைப் பணியாளர்கள் மூலம் அப்பகுதியில் தேங்கியிருந்த தேவையற்ற கழிவுகள் பாதுகாப்பாகச் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டன. தொடர்ந்து, அப்பகுதி பொதுமக்களுக்கு சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. வீடுகளில் சேரும் மக்கும் குப்பை, மக்காத குப்பை எனத் தரம் பிரித்து வழங்க வேண்டும் என்றும், பொது இடங்களில் குப்பைகளைக் கொட்டாமல் சுகாதாரப் பணியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், தங்கள் பகுதியில் தூய்மையைப் பராமரிக்க மாநகராட்சியின் சுகாதாரப் பணிகளுக்குப் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என சுகாதார ஆய்வாளர் கேட்டுக்கொண்டார்.

அனைத்து வீடுகளுக்கும் சோலார் பேனல் அமைக்க சிறப்பு முகாம்

ஈரோடு ஆட்சியர் தொடங்கி வைத்தார்



ஈரோடு, அக். 16: ஈரோடு மாவட்டத்தில் பிரதம மந்திரி சூரிய வீடு மின்சாரத் திட்டத்தின் கீழ், வீடுகளில் கூரை சோலார் மின் உற்பத்தி அமைப்புகளை நிறுவுவதை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு சேவா சேது முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தில் மத்திய, மாநில அரசுகளின் மானியமாக 1 கிலோவாட்டிற்கு ரூ.35,000, 2 கிலோவாட்டிற்கு ரூ.70,000, 3 கிலோவாட் அல்லது அதற்கு மேல் அதிகபட்சமாக ரூ.1 லட்சம் வரை வழங்கப்படுகிறது

இதன் தொடர்ச்சியாக, ஈரோடு சோலார் சரவணா மஹாலில் நடைபெற்ற சிறப்பு முகாமை மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தார். முகாமில் இணையவழி விண்ணப்பப் பதிவு, அங்கீகரிக்கப்பட்ட சோலார் விற்பனையாளர்களைத் தேர்வு செய்தல், நெட் மீட்டரிங் வசதி மற்றும் வங்கிக் கடன் பெறுதல் குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

தமிழக அரசின் கூடுதல் மானியம் முதற்கட்டமாக ஒரு லட்சம் மின் நுகர்வோருக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட உள்ளதால், தகுதியுள்ள பொதுமக்கள் இத்திட்டத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சியர் கேட்டுக் கொண்டார். இத்திட்டம் குறித்த விவரங்களுக்கு 15555 என்ற கட்டணமில்லா எண்ணைத் தொடர்புகொள்ளலாம்.

முகாம்களில் 300க்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டன. மின்வாரியத் துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

பொள்ளாச்சியில் அப்துல் கலாம் 95வது பிறந்தநாள் விழா
கேசவ் வித்யா மந்திர் பள்ளியில் மாணவர்கள் கையெழுத்து இயக்கம்!!



கோவை அக்16 பொள்ளாச்சி பாலக்காடு சாலையில் அமைந்துள்ள கேசவ் வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் 95வது பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு விழா நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக முதலுதவி சமூக நல அறக்கட்டளையின் நிறுவனர் அபு. இக்பால் கலந்து கொண்டார். அவர் மாணவர்கள் மத்தியில் பேசுகையில், டாக்டர் அப்துல் கலாம் அவர்களின் வாழ்க்கை வரலாறு, நமது நாட்டிற்கு அவர் ஆற்றிய அளப்பரிய சேவைகள், அறிவியல் துறையில் அவரது சாதனைகள் மற்றும் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய நற்பண்புகள் குறித்து விரிவாக எடுத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இதனைத் தொடர்ந்து மாணவர்கள் சார்பில் அப்துல் கலாம் அவர்களின் கொள்கைகளை பின்பற்றுவோம் என உறுதியேற்று கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பள்ளியின் தாளாளர் ஆர்.வி. எஸ். மாரிமுத்து, செயலாளர் எஸ்.டி. ரவிச்சந்திரன், முதல்வர் பிரகாஷ் உள்ளிட்ட ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இரண்டு அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி தென்காசி ஆட்சியர் அலுவலகம் முற்றுகை!



தென்காசி, அக்.16

தென்காசி மாவட்டம் ஊத்துமலை முதல் தேவர் குளம் மற்றும் வன்னிக் கோனந்தல் வரை செல்லும் மண் சாலை வழித்தடத்தைதார்சாலையாக மாற்ற வேண்டும். சர்வே எண். 87 ல் உள்ள 57 ஏக்கர் அரசுக்கு சொந்த மான இடத்தை கால்நடைகளுக்கான மேய்ச்சல் புறம் போக்கு நிலமாக மாற்றித் தர வேண்டும் என்ற இரண்டு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் மூவி சுந்தர் தலைமையில் விவசாயிகள் 100க்கும் மேற்பட்டோர் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது விவசாயிகள் மண் சாலையை தார் சாலையாக மாற்ற வேண்டும். அரசுக்கு சொந்த மான இடத்தை கால்நடைகளின் மேய்ச்சல் நிலமாக மாற்ற வேண்டும். விளை நிலங்களை சேதப்படுத்தும் காட்டுப் பன்றிகளை கட்டுப்படுத்த முன்வராத ஊத்துமலை வனத்துறையை கண்டித்தும் கோரிக்கைகளை வலியுறுத்தியும் கோஷங்களை எழுப்பினார்கள். இதனைத் தொடர்ந்து அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த காவல்துறையினர் விவசாயிகளை தடுத்து நிறுத்தியதுடன் முக்கிய நிர்வாகிகள் 5 பேரை மட்டும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் மனு கொடுக்க அனுமதித்தனர். பின்னர் மாநிலத் தலைவர் மூவி சுந்தர், செயலாளர் மனோகரன், தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு சங்கம் மாநிலத் துணைத் தலைவர் வடகரை ஜாகிர் உசேன், தமிழ்நாடு அனைத்து விவசாய சங்க ஒருங்கிணைப்பு குழு மகாலிங்கம், மற்றும் சண்முகசுந்தரம், செல்வம் ,சுந்தர்ராஜன் ஆகியோர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரிடம் கோரிக்கை மனுவை வழங்கினர்.

தருமபுரியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் அமைச்சர் ராஜ்குமார் மற்றும் எம்எல்ஏ ஆட்சியர் பங்கேற்பு



. தருமபுரி அக்.16 தருமபுரி மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணிகள் துறை சார்பில் கர்ப்பிணி தாய்மார்களுக்கான சமுதாய வளைகாப்பு விழா தருமபுரி பழைய ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. இந்த விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமை தாங்கினார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அருண்கபிலன், பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் கஜேந்திரன், மேற்கு மாவட்ட செயலாளர் சிவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இவ்விழாவில் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை அமைச்சர் ராஜ்குமார் கலந்துகொண்டு குத்து விளக்கு ஏற்றி விழாவினை தொடங்கி வைத்தார். பின்னர் அவர் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்தில் 10 வட்டாரங்களில் செயல்படும் 1,386 அங்கன்வாடி மையங்களிலும் பதிவு செய்யப்பட்டு இணை உணவு பெற்று பயனடையும் 100 கர்ப்பிணி தாய்மார்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கினார். மேலும் அனைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு பல்வேறு கலவை சாதங்கள் உள்ளிட்டமதிய உணவு வழங்கப்பட்டது. தொடர்ந்து தருமபுரி ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தருமபுரி மண்டலத்தின் சார்பில் மூன்று பேருந்துகள் வழி நீட்டிப்பு, மாற்றமைக்கப்பட்ட வழித்தடங்கள் மற்றும் தற்சமயம் இயக்கப்பட்டு வரும் மகளிர் பயணம் செய்யும் பழைய "வெற்றி பயணம்" நகர பேருந்துகளுக்கு பதிலாக 21 புதிய நகர பேருந்துகளின் சேவைகளை அமைச்சர் ராஜ்குமார் தொடங்கி வைத்தார். தொடர்ந்து தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் நடந்த நிகழ்ச்சியில் தாய்மாமன் தங்க மோதிரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 12 குழந்தைகளுக்கு ஒரு கிராம் தங்க மோதிரங்களை அமைச்சர் வழங்கினார். இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் சுகந்தி, அரசு போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குனர் ராஜ ராஜன், அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மனோகர், துறை முதல்வர் சாந்தி, மருத்துவப் பணிகள் இணை இயக்குனர் பாரதி, கிழக்கு மாவட்ட செயலாளர் விஜயகாந்த் மற்றும் அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் வேலூர் மாநகராட்சி ஆணையாளர் அ.கேத்ரின் சரண்யா, இ. ஆ .ப. உத்தரவின் பேரில் மண்டல 4 தொரப்பாடி வள்ளலார் கூடத்தில் மண்டலம் 4,க்கு உட்பட்ட 15 வார்டுபொதுமக்கள் வியாபாரிகள் பயனடையும் வகையில்வரி வசூல் சிறப்பு முகாம் 4,மண்டல அலுவலர் ஸ்டாலின் பாபு, தலைமையில் சிறப்பு வரி வசூல் முகாம் நடைபெற்றது இம்முகாமில்புதிய வரி விதித்தல் கால்மனைவரி விதித்தல் சொத்து வரி மற்றும் குடிநீர் பெயர் மாற்றம் செய்தல் மற்றும் கடை வாடகை குத்தகை இனங்கள் இதில் செலுத்தவும் வழி வகை செய்யப்பட்டனஇந்நிகழ்ச்சியில் ஏராளமான பொதுமக்கள் வியாபாரிகள் கலந்து கொண்டு புதிய வரி மற்றும் பெயர் மாற்றம் காலி மனை வரி கடை வரி செலுத்தினார்க ள்மேலும் மேலும் இம்முகாமில்வருவாய் உதவியாளர் (ARO) குமரவேல்,ஆய்வாளர் கதிர்வேல், மற்றும்வரி தண்டல ர்கள் கலந்து கொண்டனர்



எள்ளுவிளையில் ஆயுத பூஜையை முன்னிட்டு 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான கபடி போட்டி

ராஜாக்கமங்கலம் அக். 15

எள்ளுவிளையில் 40 வயதுக்கு மேற்பட்ட வீரர்கள் பங்கேற்ற மாநில அளவிலான கபடி போட்டி நடைபெற்றது. எள்ளுவிளை கபடி குழு நண்பர்கள் சார்பில் நடைபெற்ற இப்போட்டியில் பல்வேறு அணிகள் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தின. இதில் ஏழு அணிகள் பங்கு பெற்றன. போட்டியின் முடிவில் எள்ளுவிளை எ அணி முதலிடம் பிடித்து வெற்றி பெற்றது. முதலிடம் பெற்ற எள்ளுவிளை எ அணிக்கு இரு பது ஆயிரம் ரூபாய் மற்றும் சுழற்கோப்பை வழங்கப்பட்டது. இரண்டாம் இடம் பெற்ற அம்மச்சியார் கோவிலூர் அணிக்கு ரூபாய் 15 ஆயிரம் மற்றும் சுழற்கோப்பையும், மூன்றாம் பரிசு பெற்ற கடல் அலை அணிக்கு ரூபாய் 10ஆயிரம் மற்றும் சுழற் கோப்பையும் வழங்கப் பட்டது. நான்காம் இடம் பிடித்த எள்ளுவிளை பி அணிக்கு ரூ.10 ஆயிரம் மற்றும் சுழற் கோப்பையும், வழங்கி கவுரவிக்கப் பட்டது. வயது முதிர்ந்த வீரர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் வகையிலும், கபடி விளையாட்டின் மீதான ஆர்வத்தை வளர்க்கும் நோக்கிலும் இப்போட்டி நடத்தப் பட்டது. போட்டிக்கான ஏற்பாடுகளை எள்ளுவிளை கபடி குழுவைச் சேர்ந்த வைகுண்டமணி, சிவசேகர், சிவனேஷ்வரன், வெங்கட்ராம், அருண்பிரபு, பாரத் கணேசன், தினேஷ் மற்றும் நண்பர்கள் செய்திருந்தனர்.

தேங்காப்பட்டணம் மீன்பிடி துறைமுகத்தில் மீனவர் மீது தாக்குதல்; 3 பேர் மீது வழக்கு

புதுக்கடை, அக்.16 புதுக்கடை அருகே தேங்காப்பட்டணம் பகுதி முள்ளூர்துறையை சேர்ந்தவர் சில்பி (50). மீனவரான இவர் தேங்காப்பட்டணம் மீன்பிடித் துறைமுகத்தில் மீன் வியாபாரம் செய்து வருகிறார். நேற்று முன்தினம் இவர் மீன்களை வாங்கி எடை போட்டு விற்பனைக்காக வைத்திருந்தார். அப்போது சின்ன ராமன்துறை பகுதியை சேர்ந்த லிப்போன்ஸ் (55) என்பவர் அந்த மீன்களை கேட்டுள்ளார். சில்பி அதை கொடுக்க மறுத்துள்ளார். உடனடியாக லிபோன்ஸ் தனது இரு மகன்களான ராஜேஷ் (27), மகேஷ் (24) ஆகியோரை போன் செய்து வரவழைத்துள்ளார். பின்னர் சில்பியை கெட்ட வார்த்தைகள் பேசி, தாக்கி கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். இதில் சில்பி படுகாயம் அடைந்தார். அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு குழித்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இது குறித்த புகாரின் புதுக்கடை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் முத்துகிருஷ்ணன் 3 பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறார்.

நீரை சேமிப்போம்!
மரங்களை வளர்ப்போம்!

உலகின் மிகச்சிறிய கல்வி உதவி ரோபோ 'கலாம் ஸ்பார்க்' அறிமுகம்!



கன்னியாகுமரி, அக். 16:

உலக மாணவர் தினத்தை முன்னிட்டு, நூருல் இஸ்லாம் பல்கலைக்கழகம் மற்றும் அக்யூபாட்ஸ் (Acubots) நிறுவனம் இணைந்து உருவாக்கிய 'கலாம் ஸ்பார்க்' என்ற அனிமாட்ரானிக் கல்வி உதவி ரோபோ அறிமுகப்படுத்தப்பட்டது.

டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் முகச்சாயலைக் கொண்ட இந்த ரோபோவின் முதல் செயல்விளக்கம், அவரது அதிகாரப்பூர்வ இல்லத்தில் நடைபெற்றது. குழந்தைகளுடன் உரையாடும் திறன் கொண்ட இந்த ரோபோவை கலாமின் குடும்பத்தினர் ஆர்வத்துடன் வரவேற்றனர்.

நவீன அனிமாட்ரானிக்ஸ் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ள 'கலாம் ஸ்பார்க்', மாணவர்களின் சந்தேகங்களுக்குப் பதிலளிப்பது டன், கற்றலை ஊடாடக் கூடியதாகவும் சுவாரஸ்யமானதாகவும் மாற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சியைப் பாராட்டிய டாக்டர் ஏ.பி.ஜே.எம்.ஜே. ஷேக் சலீம், அறிவியல் சிந்தனைகளையும் அப்துல் கலாமின் தொலைநோக்குப் பார்வையையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்ப்பதில் செயற்கை நுண்ணறிவு சார்ந்த கண்டுபிடிப்புகள் முக்கியப் பங்காற்றும் என்றார்.

நிகழ்ச்சியில் நூருல் இஸ்லாம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் டெஸ்லி தாமஸ், இணைத் துணைவேந்தர் டாக்டர் ஷாஜின் நர்குணம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். கல்வித் துறையில் தொழில்நுட்பப் புதுமைகளைப் புகுத்தும் முயற்சியாக 'கலாம் ஸ்பார்க்' அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

நட்டாலம் அருகே நான்கு வழி சாலை அடியில் சுரங்கப்பாதை திட்டம் ரத்து;அதிகாரிகளை முற்றுகையிட்ட பொதுமக்கள்



மார்த்தாண்டம், அக்.16

குமரி மாவட்டத்தில் நான்கு வழி சாலை பணிகள் பல வருடங்களாக நடைபெற்று வருகின்றன. இந்த நான்கு வழி சாலை விளவங்கோடு தாலுகாவிற்கு உட்பட்ட நட்டாலம் அருகே காட்டுவிளை என்னும் பகுதி வழியாக செல்கிறது .இதே பகுதியில் இரு ஊர்களை இணைக்கும் வகையில் கிராம சாலை ஒன்றும் செல்கிறது. இந்த இரு ஊர்களிலும் 200 க்கும் மேற்பட்ட குடும்பங்களும் வசித்து வருகின்றனர்.

நான்கு வழி சாலை பணிகள்துவங்கும்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அப்பகுதி மக்களை சந்தித்து கிராம சாலையை துண்டிக்காமல் நான்கு வழிச்சாலையின் அடிப்பகுதி வழியாக சுரங்க சாலை அமைத்து தருவதாக கூறியுள்ளனர். இதனால் பொதுமக்களும் எதிர்ப்பு தெரிவிக்காமல் நான்கு வழிச்சாலையின் பணிகள் முழுவீச்சில் நடைபெற்றுள்ளது. இதற்கிடையே சுரங்க சாலை அமைத்து தருவதாக கூறிய பகுதியில் இரவோடு இரவாக நிரந்தர கான்கிரீட் தடுப்பு கள் அமைத்து கிராம சாலையை துண்டித்து இரு ஊர்களுக்கு செல்லும் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது . சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கிராம சாலையை துண்டிக்காமல் சுரங்கசாலை அமைத்து தருவதாக கூறி ஏமாற்றி தற்போது கிராம சாலை துண்டிக்கப்பட்டுள்ளதால் ஒரு கிலோமீட்டர் தூரம் சுற்றி திரிந்து தங்களது தேவைகளுக்காக பக்கத்து ஊருக்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் வயதானவர்கள் உட்பட இந்த கிராமப் பகுதிகளில் வசிக்கின்றனர் மருத்துவம் உட்பட அவசர தேவைகளுக்கு செல்லவும் பல கிலோமீட்டர் சுற்ற வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.


இந்த நிலையில் அந்தப் பகுதி பொதுமக்கள் இணைந்து நேற்று முன்தினம் தேசிய நெடுஞ் சாலை துறை அதிகாரிகள் அந்த பகுதியாக சென்ற போது முற்றுகையிட்டு சிறை பிடித்து பிடித்தனர். இதை அறிந்தவுடன் மார்த்தாண்டம் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தையில் சம்பந்தப்பட்ட நெடுஞ் சாலை துறை அதிகாரிகள் உடனடியாக சுரங்கபாதை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். சுரங்க சாலை அமைத்து தர வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர். மேலும் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் இப்பகுதி மக்களையும் பொது மக்களையும் அனைத்து அரசியல் கட்சியினரையும் ஒன்றிணைத்து சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபட போவதாகவும் அறிவித்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 3,319 குழந்தைகளுக்கு தாய்மாமன் தங்க மோதிரம்!

முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு தங்கையாக உள்ளம் கனிந்த நன்றி







கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறந்த 3,319 குழந்தைகளுக்கு, தமிழக அரசின் 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டத்தின் கீழ் தலா ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழர் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தில் தாய் மாமனின் அன்பையும் பாசத்தையும் பிரதிபலிக்கும் வகையில், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கும் திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த செப்டம்பர் 28ம் தேதி தொடங்கி வைத்தார்.

அதன்படி, கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் ச. தினேஷ் குமார் மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்கள் முகுந்தன், டாக்டர் இளையராஜா ஆகியோர் குழந்தைகளுக்கு தங்க மோதிரங்களை வழங்கினர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஜூன் 22 முதல் அக்டோபர் 14 வரை அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறந்த குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். தொடர்ந்து அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கும், அவர்கள் வீடு திரும்பும்போது அந்தந்த மருத்துவமனைகளில் தங்க மோதிரம் வழங்கப்படும்.

இத்திட்டம் அரசு மருத்துவமனைகளில் பாதுகாப்பான பிரசவத்தை ஊக்குவிப்பதுடன், தாய் மற்றும் சேய் நலத்தை மேம்படுத்தவும், அரசு மருத்துவமனைகள்மீதானபொது மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தவும் உதவுகிறது.

பயனாளிகள்மகிழ்ச்சி

கிருஷ்ணகிரி நகரைச் சேர்ந்த ஸ்ரீதேவி, தனது இரண்டாவது பெண் குழந்தைக்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரசவம் நடைபெற்றதாகவும், குழந்தைக்கு ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்பட்டது மகிழ்ச்சியளிப்பதாகவும் தெரிவித்தார்.

பாரதியார் நகரைச் சேர்ந்த கரிஷ்மா கூறுகையில், அரசு மருத்துவமனையில் இலவசமாகப் பிரசவ சிகிச்சை மற்றும் மருத்துவ வசதிகள் கிடைத்ததாகவும், தங்க மோதிரம் வழங்கிய திட்டம் தங்கள் குடும்பத்திற்கு மகிழ்ச்சியளிப்பதாகவும் தெரிவித்தார்.

மேல்கரடிகுறி கிராமத்தைச் சேர்ந்த ஹரிதா, கர்ப்ப காலம் முதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் தொடர் கண்காணிப்பும் ஆலோசனைகளும் கிடைத்ததாகக் கூறினார். அரசு மருத்துவமனையில் பாதுகாப்பாகக் குழந்தை பெற்றெடுத்ததுடன், தனது குழந்தைக்கும் தங்க மோதிரம் கிடைத்தது மகிழ்ச்சியளிப்பதாகத் தெரிவித்தார். மூன்று பயனாளிகளும் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்தனர். மகப்பேறு நிதியுதவி, ஊட்டச்சத்துப் பெட்டகம் உள்ளிட்ட திட்டங்களுடன் இணைந்து, தாய்மாமன் தங்க மோதிரத் திட்டம் குழந்தை பிறப்பை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் நினைவுச் சின்னமாக அமைகிறது..

தொகுப்பு
சு.மோகன்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
அ.க.ரமேஷ்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கிருஷ்ணகிரி மாவட்டம்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.